முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, அரசு நிறுவனமாக இருக்கிற அந்த TAMPCOL நிறுவனம், இது போன்ற சூரணங்களை, மூலிகை மருந்துகளை, இதுபோன்ற இந்திய மருத்துவ முறைக்கு ஏற்ற மருந்துகளைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, மேலும் சில மருந்துகளைத் தயாரிப்பதற்கு இந்த நிறுவனத்திற்கு அரசு நல்ல ஆலோசனைகளை வழங்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நோக்கத்துடன்தான் 2002 ஜூன் மாதம் Tamil Nadu Medicinal Plant Board என்ற ஓர் அமைப்பை அமைத்து, இந்த மூலிகைகளை, குறிப்பாக இந்திய மருத்துவத்தை, அதிலும் குறிப்பாக சித்த மருத்துவத்தை மக்களிடையே பரவலாகப் பரப்புவதற்கு நல்ல முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். இந்த அமைப்பு அதுகுறித்து நிச்சயமாக நல்ல நடவடிக்கைகளை எடுக்கும் என்கின்ற அந்த உறுதியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 27, திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

27--

மருத்துவக் கல்லூரி

***19399—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவக் கல்லூரி துவக்கிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2003 ஜனவரி 29]

(அ) மற்றும் (ஆ) ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவக் கல்லூரி துவங்கும் கருத்துரு இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. எஸ். தென்னரசு.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஈரோடு, சி.எம்.சி. காலேஜை அரசு கலைக் கல்லூரியாக அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, மாண்புமிகு அம்மா அவர்கள் இரண்டு ஆண்டு காலத்திற்கு, மீண்டும் அரசுக் கல்லூரியாக ஆணையிட்டதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதச்சுவட்டை நோக்கி, பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈரோட்டிலே இயங்கி வரும் தந்தை பெரியார் தலைமை மருத்துவமனையில் தினமும் நாள் ஒன்றிற்கு 2100 புற நோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள். 700-க்கும் மேற்பட்ட உள் நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஆண்டிற்கு 6000 பிரசவ சிகிச்சைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆண்டிற்கு 1800 பெரிய அறுவை சிகிச்சைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 2500-க்கு மேற்பட்ட குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட ஒரு பெரிய மருத்துவமனையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 25,74,004 பேர் என மக்கள் தொகை கொண்ட அந்த மாவட்டத்தில், அந்த மருத்துவமனையில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மறுபரிசீலனை செய்து, அடுத்த ஆண்டிலாவது மருத்துவக் கல்லூரியைத் தொடங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு அரசு மருத்துவமனையில் புறநோயாளிகளின் எண்ணிக்கை, உள் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது என்பது உண்மைதான். இதைக் கருத்தில் கொண்டுதான் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நடந்து முடிந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில்கூட, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக மக்களுடைய அந்தக் கோரிக்கை எடுத்துவைக்கப்பட்டபோது, அந்த மாநாட்டிலேயே,

[2003 ஜனவரி 29

ஈரோடு அரசு மருத்துவமனையினுடைய விரிவாக்கத்திற்கான உத்தரவுகளை வழங்கி இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, அந்த மருத்துவமனை விரிவுபடுத்தப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே தமிழகத்தில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சொந்த மாவட்டமான ஈரோடு மாவட்டத்தில், ஈரோட்டிற்கு மிக அருகிலே, 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பெருந்துறையிலே சாலைப் போக்குவரத்து நிறுவனம் நடத்தும் மருத்துவக் கல்லூரி ஒன்று இருக்கிறது. நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இங்கே அரசின் சார்பிலே தேனி, வேலூர், கன்னியாகுமரி ஆகிய மூன்று இடங்களிலும் அரசு மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதற்கு ஆணை வழங்கி, தேனியிலே அமைக்கப்பட இருக்கிற அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 12 கோடி ரூபாயையும், வேலூரிலே அமைக்கப்படவிருக்கிற மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 5 கோடி ரூபாயையும், கன்னியாகுமரியிலே அமைக்கப்படவிருக்கிற மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 5 கோடி ரூபாயையும் ஒதுக்கி ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 28, திரு. அ. நடராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

28—

வேளாண்மைத் தகவல் மையங்கள்

***11022—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட்டம் அல்லது ஒன்றியம் அளவில் வேளாண்மைத் தகவல் மையங்கள் அமைத்து, விவசாயிகளுக்கு உரிய தகவல் அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

TRUTH ALONE TRIUMPHS